8 FEB 1914

பிரணவப்பொருளறியாத

பிரமன்

(முருகக்கடவுளும், பிரமதேவனும்.)

இச்சரித்திரம்,

வேலூர் காலேஜ் தமிழ்ப்பிரதமபண்டிதர்

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்

எழுதியது.

வேலூர்

சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

[*All rights reserved.*]

1914

[அணா ஒன்றரை]

Q26
N14.
170121

-600 00

ஸ்ரீ

காப்பு

எல்லையிலாச்சீர்வாய்ந்தவெம்பெருமானாரணனம்
மல்லன்மலரடிகள்வாழ்த்திநான்-சொல்லமைந்த
கந்த புராணத்தோர் காதையா மற்றிதனைச்
சந்தமுறச் சொல்வேன் றக.

1204/21 முகவுரை

'பிரணவப்பொருளறியாத பிரமன்' என்னும் இச்சிறுநூல், அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழியில் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் செய்யுள்ரூபமாக அருளிச்செய்துள்ள கந்தபுராணத்திற் பொருந்திய 'அயனைச் சிறைபுரி படலம்', 'அயனைச்சிறைநீக்குபடலம்' என்பவற்றைத்தழுவி வசனநடையில்எழுதப்பட்டதாகும்.

செய்யுள்ரூபமாக அமைந்துள்ள சிறந்த இனிய இதிஹாஸ புராண கதைகளைப் படித்தறிய இயலாதவர்க்கு, அவற்றை வசனநடையில் எழுதி வெளியிட்டால் படித்தறிதல் எளிதாகவிருக்குமென்று, என் நண்பர்கள் உரைத்தனர். அவர்களுரையைச் சிரமேற்கொண்டு யான் எழுதும் வசனநூல்களுள் இதுவும் ஒன்றாகும்.

இந்நூலை ஆதரித்துத் தம்மால் இயன்றவுதவி புரியும்வண்ணம் தமிழபிமானிகளை வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூலிற் காணப்படும் குற்றங்குறைகளை எனக்குத் தெரிவிக்கும்படி அறிவுடையாரை வேண்டுகின்றேன்.

வேலூர்
1914ஆ ஜனுவரிமீ 25உ

பு. க. ஸ்ரீ.

ஸ்ரீ

கடவுள் துணை.

பிரணவப்பொருளறியாத

பிரமன்

(முருகக்கடவுளும், பிரமதேவனும்.)

சிவகுமாரராகிய சுப்பிரமணியக்கடவுள் இளமைப்பிராயத்தில் விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் திருவிளையாடல்கள் பற்பல புரிந்து உலாவிக்கொண்டு வெள்ளிமயமான ஸ்ரீகைலாஸகிரியிலே எழுந்தருளியிருக்கின்ற பலநாள்களுள் ஒருநாளில், நல்லொழுக்கத்தைக்கொண்டவனும் ஈசன்திருவடிகளை வணங்குதலை நாடோறும் செய்யும் முறைமையாகக் கொண்டவனுமாகிய பிரமன் முதலிய தேவர்கள், சிவபிரானுடைய திருவடிகளை வணங்கக் கருதி, அக்கைலைமலையினிடத்தில் வந்தார்கள். அவர்கள், சிவபிரானைத் தரிசித்து, அவருடைய திருவடிகளை வணங்கி, அவரது அருளைப் பெற்று, பின்பு அக்கடவுளினது சன்னிதானத்தை விட்டுக் கோபுர

வாயிலைச் சேருகிற சமயத்தில், முருகக்கடவுள், சிவபிரானது அழகிய பொன்மயமான திருக் கோயிலினது முன்னிடத்திலே, நீண்ட கோபுர வாயிலிலே, பெரிய இரத்தினங்கள் பதித்த தலத்திலே, வீரவாகு முதலிய லக்ஷத்தொன்பது சேனைவீரர்கள் மனமகிழ்ந்து அன்போடு தன்னைச் சூழ்ந்துநின்று போற்ற, இனிமையாக விளையாடிக்கொண்டு தங்கியிருந்தான்.

அங்கு அவ்வண்ணம் எழுந்தருளியிருக்கின்ற சுப்பிரமணியன், சிவபிரானுடைய திருவடிகளை நமஸ்கரித்து வெளிவருகின்ற தேவர்களுள் தலைவனான பிரமனை நோக்கி, 'இங்கு நம் முன்னே வருவாயாக' என்று அழைத்தான். பிரமன் செருக்குடன் அருகிற் சென்று, அம்முருகக்கடவுளை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரியாமல், உள்ளுற விநயமின்றி உபேக்ஷையாகக் கைகூப்பித்தொழுதல்மாத்திரஞ் செய்தான். அவ்வளவிலே, எல்லாவுயிர்களுக்கும் முதல்தேவனாகிய சிவபிரான் பெற்ற இளங்குமரனான முருகன், அப்பிரமனது மனச்செருக்கை நோக்கி, அதை அடக்கத் திருவுள்ளங்கொண்டு, 'பிரமனே! இருக்க' என்று சொல்லி, அவனை உட்காரச்செய்து, 'நாடோறும் நீ செய்யும் முறைமை யாது?' என்று

வினவினன். அதற்கு நான்முகன், 'யாவர்க்கும் நாதனான சிவபிரானது ஆணையால் எல்லாப்பொருள்களையும் நான் படைத்திடுவேன்' என்று விடைகூறினன்.

அப்பிரமன்வார்த்தையைக் கேட்டவளவிலே, குமாரக்கடவுள், அவனது அறிவின்மையைக் கருதி, அவமதியாகப் புன்சிரிப்புச்செய்தருளி, அவனை நோக்கி, 'மண்ணுலகத்தினும் விண்ணுலகத்தினுமுள்ள உயிர்களெல்லாவற்றையும் நீ படைப்பையேயானால், உனக்கு வேதங்களெல்லாம் வருமோ? சொல்வாய்' என்று சொல்ல, தொன்றுதொட்டுவருகின்ற சிறப்பையுடைய பிரமனென்று சிறப்பித்துக்கூறப்படுகிறவன் இவ்வாறு சொல்லத் தொடங்கினன் :— 'ஐயனே! யான் சொல்வதைக் கேட்பாயாக: பிரபஞ்சசிருஷ்டியின் முதலில் என்னைப் படைத்தருளிய பரமசிவன், அளவில்லாத வேதங்களையும் சிறந்த பற்பல ஆகமங்களையும் செய்து, அந்த வேதாகமத்திற் சிலவற்றை நான் அறிந்து ஈடேறும்படி எனக்குச் சொல்லியருளியுள்ளார். அவற்றை நான் அறிந்துள்ளேன்.' என்று நான்முகன் கூறியவளவிலே, குமாரக்கடவுள் அவனை நோக்கி, 'அவ்வேதங்களுள் ஒரு இருக்கை நீ

சொல்' என்று சொன்னான். பிரமன், 'நன்று' என்று சொல்ல உடன்பட்டு, வேதங்களெல்லா வற்றிற்கும் முதலிற் சொல்லவேண்டியின்றதாகிய ஒரு தனிமொழியாகிய பிரணவத்தை முன்னே முறைமையாகச் சொன்னான். இவ்வாறு பிரமதேவன் பிரணவமஹாமந்திரத்தை முதலிலே சொல்லி, சிறந்த பெரிய வேதத்தின் தொடக்கத்தை எடுத்துச்சொல்லத் தொடங்கிய வளவிலே, முருகக்கடவுள் அவனை நோக்கி, 'மேற்சொல்வதையொழிந்துநிற்பாய்; முதலிலே சொன்ன 'ஓம்' என்னப்பட்ட மந்திரத்தினது பொருளைச் சொல்வாயாக' என்று சொன்னான். அந்த 'ஓம்' என்ற ஒரெழுத்தைத் தனது ஆறு திருமுகங்களுள் ஒன்றுகப் பெற்றுள்ள தன்மையுடைய ஒப்பற்ற சுப்பிரமணியன், பிரமனை நோக்கி நகைத்து, எல்லாவெழுத்துக்களுள்ளும் தலைமைத்தாகிய பிரணவமந்திரத்துக்குப் பொருள்சொல்லுவாயென்று சொல்ல, பிரமன், அதன் அர்த்தவிசேஷத்தை அறியாதவனாகி, பெரிய தன் எட்டுக்கண்களையும் மருளமருள விழித்தவனாய், வெட்கமுற்று, கண்டத்தில் விக்குள்கொண்டு திகைத்து நின்றான். சிவபிரான் எழுந்தருளியிருக்கின்ற பீடமாய், மற்றைய தேவர்கள் உதிக்கும் இடமாய், எல்லாவெழுத்துக்

களுக்கும் வேதங்களுக்கும் முந்திய எழுத்தாய்' காசியிலே இறப்பவர்களுக்குச் சிவபிரான் உபதேசிக்கும் குற்றமற்ற தாரகமந்திரமாகவுள்ள அப்பிரணவத்தினது பொருளை அறியாமல் பிரமன் என்செய்வதென்று ஆலோசிப்பவனானன். ஞானமயமான பிரணவமந்திரத்தை மூலபாடஞ் சொல்லுதலேயல்லாமல் பிரமன் அதன்பொருளை அறிந்தானில்லை. யாதுசெய்வான்! பரமசிவனது திருவருளினல் அப்பொருளை முன்னமே அறிந்திலன். ஆதலால் மயங்குகின்றான் என்றால், அந்த மஹாமந்திரத்தின் அர்த்தத்தை உபதேசம்பெறாமல் தாமாக எடுத்துச்சொல்லவல்லவர் யார்? பரிசுத்தமான வேதங்களெல்லாவற்றிற்கும் முதலிலும் இறுதியிலும் சொல்லப்படுகிற 'ஓம்' என்னப்படுகின்ற ஏகாக்ஷரமந்திரத்தினது உண்மைப்பொருளை உணராதவனாய்ப் பெரிய பிரமதேவனும் மயங்கினனென்றால், இனி, சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவுடையோமாகிய நாம் சிலவற்றை அறிந்தோமென்று சொல்வது நகைப்பையே விளைப்பதாம்.

எளிதில் ஆராய்ந்தறியவொண்ணாத அந்தப் பிரணவத்தின் பொருளை இன்னதென்று எடுத்துக்கூறமாட்டாதவனாய்ப் பிரமன் திகைத்

தவளவிலே, முருகன், அவனை நோக்கி, 'இந்த மூலமந்திரத்தினது அர்த்தத்தை நீ அறியாய். படைத்தற்றொழிலைச் செய்வதும் இப்படிப்பட்டதோ? இதையறியாத நீ அதுசெய்யத்தக்கதன்று' என்றுசொல்லி, அயனது நான்கு தலைகளும் குலுங்கும்படி அவற்றிற் கையால் நறுக்கென்று குட்டினான்; அன்றியும், பிரமன் வீழ்ந்திடும்படி தன் பாதங்களால் உதைத்து, தன் ஏவலாளர்களைக்கொண்டு, கந்தகிரியென்கிற தனக்கு உரிய மலையில் அப்பிரமனை விலங்கிட்டுக் காவலில் வைத்திடவும்செய்தான். எல்லாத்தொழில்களையுஞ் செய்யவல்லவனான முருகன், இங்ஙனம் மலரவனை மிகத் துன்பந்தருகின்ற அருமையான சிறைச்சாலையிலே விலங்கிட்டு வைக்கச்செய்து, அதன்பின், தான் எல்லையில்லாத மிகப்பெரிய கந்தகிரியிற் சென்று சேர்ந்து, பலவான பிராணிவர்க்கத்தை அன்போடு படைக்குந்தொழிலைச் செய்ய எண்ணினான்.

தனது ஒரு திருக்கையில் ருத்திராக்ஷமாலையைத் தரித்து, தனது மற்றொரு திருக்கையில் கமண்டலத்தைத் தரித்து, மற்ற இரண்டு திருக்கைகள் வரதமுத்திரையையும் அபயமுத்திரையையுங் காட்ட, இவ்வாறு நான்கு திருக்கை

கள்கொண்டு, எல்லாப்பொருள்களினும் சிறந்த பொருளாகிய பரமசிவத்தினது குமாரனை ஷண்முகன், அழகிய ஒரு திருமுகத்தை யுடையவனாய், நான்முகன்போலவே படைத்தற்றொழிலைச் செய்பவனானான். எல்லாவுயிர்களுக்கும் உயிராய், எல்லாவொளிகளினும் சிறந்துவிளங்கும் ஒளிவடிவமாய், பெரிய வேதங்களின் கூட்டத்துக்கு முடிவாய், படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்று சொல்லப்படுகின்ற தொழில்களுக்கெல்லாம் ஆதிகாரணமாய்த் தங்கிய முருகன் அயன்போலச் சிருஷ்டிகாரியமொன்றைச் செய்தலும் ஒரு வியப்பாகுமோ? பிரமன் காவலிற்கிடக்க, அறுமுகக்கடவுள், தானே எண்ணில்லாத உயிர்த்தொகைகளைப் படைத்துக்கொண்டிருந்தான். பெருமையையுடைய அழகிய பிரமனோடு முன்புவந்து சூழ்ந்த தேவர்கள், பிரமன் பட்ட பாட்டைப் பார்த்து உள்ளம்நடுங்கி, முருகக்கடவுளைச் சாஷ்டாங்கமாகப் பலமுறை தொழுது, தமது இடங்களிற் போய்ச் சேர்ந்தார்கள்.

சிவகுமாரன், இவ்வாறு அளவில்லாத பல காலம், எல்லாப்பொருள்களையும் படைத்திருந்தவளவிலே, திருமால், நான்முகனது சிறையை

ஒழிக்கக்கருதி, நல்லொழுக்கமுடைய தேவர்களையும் முனிவர்களையும் தம்மிடம் வரும்படி நினைத்தார். திருமால் தம்மை நினைத்ததை அறிந்து, துவாதச ஆதித்தியர்களும், கந்தர்வர்களும், அஷ்டவசுக்களும், ஸப்தமாதாக்களும், வித்யாதரர்களும், கருடர்களும், யக்ஷர்களும், அஷ்டதிக்பாலகர்களெல்லாரும் விரைந்து ஒருசேரத் திருமாலினிடம் வந்தார்கள். சந்திரன், அங்காரகன், புதன், பிருஹஸ்பதி, சுக்கிரன், சனி, ராகு, கேது என்னும் கிரஹங்களும், மற்றைய தேவகணங்களும், வானுறவோங்கிய பொதியமலையில் வந்து தங்கிய அகத்தியன் முதலாகிய ஒப்பில்லாத பெருந்தவமுடைய முனிவரர்களும், பிரமனுக்கு உதவியாகப் படைத்தலைச் செய்கின்ற பிரமர் ஒன்பதின்மரும், விசாலமான பூமியை ஒருவடிவத்தால் சுமந்துநிற்கின்ற ஆதிசேஷனும், மற்றும் ஸர்ப்பஜாதியாரும் திருமாலிடம் வந்துசேர்ந்தார்கள். இவ்விதமாகப் பலதேவர்களும் பலமுனிவர்களும் வந்துசேர, அவர்களுடனே மஹாவிஷ்ணு கைலாஸகிரியைச் சேர்ந்து, அங்குத் திருக்கோயிலின் முன்னிடத்திலே எழுந்தருளியிருக்கிற திருநந்திதேவர் தம் கண்சைகையால் உள்ளே செல்லச் சொல்ல, உட்சென்று, அங்கு, தன்னையே தனக்கு

ஒப்பாகப்பெற்றுள்ளவனை பரமசிவனது அழகிய திருவடிகளை வணங்கினர்.

இவ்வாறு, திருமால், அழகிய சீர்பாதங்களை நமஸ்கரித்து,வேதங்களிற்சொன்னமுறைப்படி போற்றிநின்றவளவிலே, சிவபிரான், அருள்கொண்டு நோக்கி, 'நீங்கள் எந்தநாளிலும் இல்லாததொரு பெருந்தளர்ச்சியோடு எம்மிடம் வந்தது என்னகாரணத்தாலோ?' என்று வினவியருளினர். அவ்வளவிலே, மஹாவிஷ்ணு இவ்வார்த்தைகளைச் சொல்பவரானர்:—

'யாவர்க்கும் இறைவனே! உனது மகனை முருகன், முன்பு ஒருநாளில் இங்கு வந்த பிரமனை வேதத்துக்கு முதன்மொழியாகவுள்ள பிரணவத்தினது சிறந்த பொருளைச் சொல்லும்படி கேட்டவளவிலே, அவன் அறியாதவனயிருக்க, அக்குமாரன், அவனைச் சிறையில் வைத்து, அப்படைத்தற்றெழிலையும் தான் புரிகின்றான். ஐயனே! முருகக்கடவுள்போலவே, பிரமனும், அருளோடு உண்டாக்கப்பட்ட உன் மைந்தனேயாவன். அப்பிரமன், முற்பிறப்பிற் செய்த தீவினையின் வசத்தால், அளவில்லாத பலநாளாக, மிகத் துன்பந்தருவதும் மீளவொண்ணாதது

மான ஆழ்ந்த சிறையிலே இடப்பட்டு, மனம் வருந்தி வாடித் துன்பத்தை அநுபவித்தான். நல்வினையில்லாத பிரமனது சிறைத்துன்பத்தை நீக்குக.'

என்று, குற்றமற்ற கடவுளைத் திருமால் வேண்டியவளவிலே, பரமசிவன், மனத்தில் மிக்க அன்பையுடைய சிலாதனென்பவனது சிறந்த குமாரனான திருநந்திதேவரைப் பார்த்து, 'பிரமனை நமது குமாரன் சிறையிடுவித்தான் என்று விஷ்ணு முதலிய தேவர்கள் சொன்னார்கள். நீ முருகனுக்கு இருப்பிடமான கந்தகிரிக்கு விரைவாகப் போய், நமது கட்டுரையைக் கூறி, அவனைச் சிறைவிடுவித்து, இவ்விடத்துக்கு மீண்டு வருவாயாக' என்று கட்டளைகூறினார்.

தலைவனான் சிவபெருமான் அக்கட்டளை உரைத்தவளவிலே, நந்தி நன்றென்று சொல்லி, அதுசெய்ய உடன்பட்டு, பிரமதகணங்களுக் கெல்லாந் தலைவரான அப்பரமசிவனை வணங்கி விடைபெற்று, எல்லையில்லாத வலிமையை யுடைய சிவகணங்கள் தன்னைச் சூழ்ந்துவரச் சென்று, கந்தகிரியிலுள்ள காவலுடைய முருகனது பட்டணத்தை அடைந்தான். வலிமையை

யுடைய ஒப்பற்ற எருதுமுகத்தையுடைய நந்தி கேச்வரன், அறுமுகக்கடவுள் எழுந்தருளியுள்ள திருக்கோயிலை அடைந்து, அவனது அழகிய தாமரைமலர்போன்ற திருவடிகளை ஸாஷ்டாங்கமாக முறைப்படி வணங்கித் துதித்து, சிலவார்த்தைகள் கூறுபவனானான்:—

'பிரமனது சிறைக்காவலை நீக்கவேண்டுவதைச் சொல்லி, நமக்கெல்லாந் தலைவனான பரமசிவன் இங்கு என்னை அனுப்பினார். ஆதலால், தடையில்லாமல் அவனது சிறையை நீக்குவாயாக. பிரணவப்பொருள் அவன் சொல்வதற்கு எளியதோ?.' என்று நந்திசொல்லுமுன்னமே, குமாரக்கடவுள் கோபங்கொண்டு, 'பிரமனது அருமையான சிறைக்காவலை நான் நீக்கமாட்டேன். இங்கு நீ நிற்பாயானால், உன்னையும் சிறையிலிட்டு வருத்துவேன். இதனைக்கருதி, இவ்விடம்விட்டு விரைவிற் போவாய்' என்றுசொன்னான். அப்பொழுது, நந்திகேச்வரன், அஞ்சி, வேறுவார்த்தையொன்றையுஞ் சொல்லமாட்டாதவனாய், முருகமூர்த்தியை நமஸ்கரித்து, ஒப்பில்லாத பெரிய கைலையங்கிரியை அடைந்தான். அடைந்த நந்தி, சிவபிரானது முன்னிலையில் விரைவாகப் போய்ச்சேர்ந்து, அக்கடவுளினது

திருவடிகளைக் கைகூப்பி வணங்கிநின்று, முருகன் சொன்ன செய்தியைச் சொன்னான். அதுகேட்டு அப்பிரான், முருகனது இளமைத் திருவிளையாட்டைக்குறித்துப் புன்சிரிப்புச்செய்தருளினார்.

சிறந்துவிளங்குகின்ற திவ்விய சிங்காதனத்தின்மேல் சிறப்பாக வீற்றிருந்த சிவபிரான், விரைவாக அவ்வாசனம்விட்டு எழுந்து, அழகுள்ள தமது திருக்கோயிலை விட்டுப் புறப்பட்டு, ஒப்பற்ற பெரிய விருஷபத்தின்மீது ஏறியருளினார். முன்னே வந்திருந்த திருமாலும், கின்னரர் முதலிய தேவசாதியாரும், நாகலோகத்தாரும், சிறந்த தவத்தையுடைய முனிவர்களும் ஆகிய எல்லோரும், தொழுது, பரமசிவன்பின்னே சென்றார்கள். பலவகைப் படைகளையேந்திய கைகளையுடையவர்களும், பலநிறங்களையுடைய ஆடைகளை உடுத்துக்கொண்டிருப்பவர்களும், செம்பட்டமயிரால் தீயினுருவம்போல விளங்குகின்ற தலையையுடையவர்களும், இடிபோலுஞ்சொற்களையுடையவர்களுமாகியகணக்கில்லாத பூதகணங்கள், சிவபிரானது பக்கங்களிலே சூழ்ந்துநின்று போற்றுதல்புரிந்தார்கள். இங்ஙனம் அனைவரும் சூழ்ந்துநின்றபொழுது,

சிவபிரான், பெரிய ருஷபத்தை ஏறிநடத்தி, திருமால் முதலிய இவர்களுடனே, பரிசுத்த மான வெள்ளிமயமாகிய அழகிய கைலாஸமலை யை நீங்கிச்சென்று, தமது குமாரனுடைய பெரிய கந்தகிரியை அடைந்தார். அம்மலையில், எவராலும் சாற்றுதற்கு அரிய சிறப்பையுடைய அறுமுகக்கடவுள் வீற்றிருந்த விசாலமான நக ரத்தின்முன்னே, சிவபிரான் ருஷபத்தினின்று இறங்கி, தேவர்களெல்லோரும் துதிக்க அந்நக ரத்தினுட் சென்றருளினர்.

சிவபிரான் கந்தனது முன்னிலையில் கருணை யோடு சென்றவளவிலே, அவ்விடத்தில், அப் பொழுது, அம்முருகன், தனது தந்தை வந்தரு ளினரென்று மகிழ்ந்து, எழுந்துவந்து, எதிர் கொண்டழைத்து, அப்பிரானது திருவடிகளை வணங்கி, பெரிய தனது இரத்தினசிங்கா தனத்தின்மேல், யாவர்க்கும் நாதனான பரம சிவனை வீற்றிருக்கச்செய்து, அப்பிரானைநோக்கி, 'எல்லாவுயிர்களுக்கும் உயிராகவுள்ள கடவுளே! நீ வந்த காரியம் யாது?' என்று வினவினன். அதுகேட்டுப் பரமசிவன், முருகனை நோக்கி, 'ஐயனே! பிரமனைச் சிறையிட்டுவைத்தாய். யாம் அச்சிறையை நீக்குதற்குக் கருதித் தேவர்களுட

னே வந்தோம். அவனைச் சிறைவிட்டிடுவாய்' என்று சொன்னார். சிவபிரான் இவ்வாறு மிகுதியாகக்கொண்ட அன்போடு சொல்லுகின்ற இனிய சொல்லைக் கேட்ட அப்பொழுதில், குமாரன், ஒளிவிளங்குகிற தனது தலையின்மேல் தரித்துள்ள கிரீடத்தைத் தகுதியின்மையைக் குறிப்பிக்க அசைத்துக்கொண்டு மறுப்பவனாய், சில வார்த்தைகள் சொல்பவனானான்:—

'எல்லாநன்மைகளையுந் தருவதான ஏகாக்ஷரமந்திரத்தின் பொருளை அறியாத பிரமன் உயிர்களைத் தினந்தோறும் படைப்பேனென்று சொல்வது பேதைமையாம். அப்பிரமன் வேதங்களை வல்லவனாயிருந்தலும், அப்பிரணவத்தைப் போலவேயாம்; [பொருளறியாமல் மூலபாடத்தைமாத்திரமே அறிவன்.] தந்தையே! ஒப்பற்ற பரம்பொருளே! வேதத்தின் முதலிற் சொல்லும்படி நின்ற தலைமையெழுத்தான பிரணவத்தின் பொருளை அறியாதவன், குறைவில்லாத மிகுந்த பூஜையை உனக்குச் செய்தவளவிலே, நீ, அவனிடத்தில் அன்புகொண்டு, படைத்தல்தொழிலாகிய ஒருபெரும்பாரத்தைஅவன்மேல் ஏற்றினாய். உனது நிறைந்த அரிய அருள் அழகுடையது! உயிர்களெல்லாவற்றையும் உலகங்களெல்லாவற்

றையும் படைத்தலாகிய சிறப்புப்பொருந்திய பெரிய செயலை, உன் அருளால் ஏற்றுக்கொண்டதனால், நான்முகன் எவரையும் சிறிதும் மதிக்கின்றானில்லை. மலரவன், நாடோறும் உன்னை வந்தனைசெய்தாலும், தனது அகந்தை ஒழிகின்றானில்லை. ஆதலால், அவனது அருமையான சிறையை நீக்கமாட்டேன்?'

என்று குமாரன் சொன்னபொழுது, கருணைவள்ளலாகிய பரமசிவன், குமாரனை நோக்கி, 'மைந்தனே! உனது செய்கை எத்தன்மையது! மலரவனது சிறையை நீக்குவாயென்று நமது கட்டளையால் நந்தி வந்து சொன்னதையும் ஏற்றுக்கொண்டாயில்லை. நாமும் நேரில் வந்து உரைத்திட்டாலும், கேட்டு அதன்படி நடக்கிறாயில்லை. தடையாக மறுத்துச்சொன்னாய்' என்று, குமாரனை வெகுள்பவர்போலக் கழறினார். இங்ஙனம் கூற, தந்தையினது சினங்கொண்ட இயல்பை அறிந்து, குற்றமற்ற அறுமுகக்கடவுள், சிவபிரானை நோக்கி, 'ஐய! உனது திருவுள்ளம் இப்பொழுது இத்தன்மையதேயானால், நான்முகனைக் கொண்டு விலங்கிட்டுள்ள சிறையிலிருந்து விடுவித்து, விரைவில் இங்குக் கொணர்வேன்' என்று பக்தியோடு பணிந்து சொல்ல, பராபரக்

கடவுளாகிய சிவபிரான் கோபக்குறிப்பு நீங்கி, அக்குமாரனிடத்து அருள்செய்பவரானார்.

. சிவபிரான் அருளோடு உத்தரவளிக்க, உடனே, சண்முகக்கடவுள், தன்பக்கத்தில் நின்ற பரிஜனர்களை நோக்கி, 'முன்பு ஒருபுறத்திலே ஒரு சிறைச்சாலையிலே வைத்துள்ள அயனை, வலிய விலங்குத்தளையினின்று நீக்கி, நமக்குமுன் விரைவிற் கொணர்மின்' என்று கட்டளையிட்டான். உடனே பூதகணங்களுட் சிலர், சென்று, சிறைச்சாலையிற் பொருந்திய ஒரு நெருக்கமான துவாரத்தினிடத்திலே மனமொழிமெய்கள் ஒடுங்கித் தங்குகிற பிரமனது வலிய விலங்கை நீக்கிவிட்டு, அவனைக் கொண்டுவந்து, மலைகளிலெல்லாம் விளையாடுதல்செய்யுந் தன்மையனான முருகக்கடவுளின்முன்னே சேர்த்தார்கள்.

பூதர்கள் பிரமனைக்கொணர்ந்து சேர்த்த வளவிலே, முருகன், மலரவனது விளங்குகிற கரங்களைப் பற்றி, அவனைத் தன் தந்தையின் திருமுன்பே விட்டான். அவ்விடத்தில், அப்பொழுது, அப்பிரமன், பரமசிவனை உண்மையாகப்பொருந்திய பக்தியினால் வணங்கி, வெட்கங்கொண்டு நிற்க, அவனைநோக்கிச் சிவபிரான்,

'பல்நாளாகப் பெரிய சிறையை அடைந்திருந்து, வருந்தி இளைத்தாய்போலும்!' என்று சொல்லி யருளினர். நாதன் இவ்வாறு கூறிச் சிறந்த கருணையைச் செய்தவளவிலே, மலரவன், சிவ பிரானை நோக்கி, 'அப்படிப்பட்ட மிக்க சிறப் புள்ள உனது குமாரன் எனக்குச் செய்த இத் தண்டனை தீமைதருவதன்று; மற்று, எனக்கு நல்லறிவைக் கொடுத்து, நான் என்கிற அகந்தை யை யொழித்து, தீங்குதரும் பாவங்களைப் போக்கி, என்னைப் பரிசுத்தமாக்கிற்று. குற்றஞ் செய்தவர்களுக்கு இம்மையிலேயே மேலோரால் தண்டனை நேர்ந்துவிட்டால், மறுமையில் பாவப் பயன் இல்லையென்பது நூல்துணிபன்றோ?' என்று சொன்னன்.

அப்பொழுது, முக்கண்மூர்த்தி, அயனை நோக்கி, 'முற்பிறப்பிற் செய்த கருமப்பயனை அநுபவித்தல் மூன்று உலகத்திலுமுள்ள எல்லா வுயிர்களுக்கும் நியதியென்பதை நீ நன்ருக அறிந் துள்ளாய்; ஆதலால், உனக்குத் தீவினைப்பயனல் நேர்ந்த தண்டனையைக்குறித்துக் கவலைப்பட மாட்டாய். மூன்றுவகையுலகங்களிலும் பொருந் திய பிராணிவர்க்கம்முழுவதுக்கும் அந்தந்த உயிர்கள் அனுபவித்தற்கு ஏற்ற முற்பிறப்பிற் செய்துள்ள புண்ணிய பாப ரூபமான கருமப்

பலன்களை நன்றாக ஆராய்ந்தறிந்தவனாய், முன்ன மேபோல இந்நாள்முதற்கொண்டு, நீயே, அவற்றிற்கு ஏற்ப, அவ்வுயிர்களை, நால்வகைத்தோற்றத்து எழுவகைப்பிறப்பில் அமைத்து, படைப்புத்தொழில் செய்துகொண்டிருப்பாய்; அவ்வவ்வுயிர்களுக்கு ஏற்ற கருமங்களை, ஏற்றத்தாழ்வில்லாமல் அமைத்திடுவாய்' என்று கட்டளையிட்டார்.

கருணையே ஒரு உருவங்கொண்டாற்போன்ற ஈசன், பிரமனுக்கு இதைச் சொன்ன பின்னர், முருகக்கடவுளின் முகத்தைப் பார்த்து, அன்பினாலாகிய மகிழ்ச்சியோடு புன்சிரிப்புச்செய்து, 'ஐயனே! எல்லாவுயிர்களுக்கும் கருணையைச்செய்துவருவாய்; பிரமன்மீண்டும்படைப்புத்தொழிலை ஏற்று நடத்தும்படி அருள்புரி; அன்புகொண்டு என்னிடம் வருவாய்' என்று சொல்லி, தாமரைமலர்போலுந் தமது கைகளை நீட்டி அவற்றால் அக்குமாரனை எடுத்து, சிறந்த அழகிய தமது மடியிலே சிறப்பாக வீற்றிருக்க வைத்துக்கொண்டார். அழகுபொருந்திய முருகனது சிரசை மிக்க அன்பினால் விரைவாக மோந்து, செந்தாமரைமலரையொத்த தம் திருக்கையால் அவனைத் தழுவிக்கொண்டு, 'அயனும் அறியாத 'ஓம்' என்னும் பிரணவமந்திரத்தினது

சிறப்புப்பொருந்திய பொருள் உனக்குத் தெரியுமோ? தெரியுமானால், அப்பொருளை இப்பொழுதே உரைப்பாய்' என்று சிவபிரான் சொன்னார்.

'எல்லாவற்றையும் ஒருசேர அறிந்துள்ள முதலாவார்யாவர்க்கும் முதலானவனே! எனது விண்ணப்பத்தைக் கேட்டருள்வாயாக: எல்லாவுலகங்களையும் பெற்றருளிய உமாதேவிக்கு நீ முன்னொருகாலத்தில் அயலாரெவரும் கேட்டறியாதவிதம் இரகசியமாகச் சொன்னதாகிய ஒப்பற்ற இந்த மூலமந்திரத்தின் பழமையான பொருளை, நான் அந்தரங்கமாகச் சொல்வதல்லாமல், எல்லோரும் கேட்டறிய வெளிப்படையாக இன்னதென்று சொல்லுதல் தகுமோ?' என்று குமாரன் சொன்னவளவிலே, சிவபிரான் நகைத்து, 'மைந்த! எமக்கு இரகசியமாகச் சொல்லுவாய்' என்று, தமது அழகிய செவியைத் தாழ்த்துக்கொடுக்க, ஆறுமுகக்கடவுள், பிரணவமென்கிற ஏகாக்ஷரமாகிய ஒப்பற்ற மந்திரத்தினது உண்மைப்பொருளைத் தந்தைக்கு உரைத்தான்.* அங்ஙனம் சொன்னதைக் கேட்டு,

---

* தந்தையாகிய பரமசிவனுக்குப் பிரணவமஹாமந்திரத்தின் பொருளை எடுத்தோதிய சிறப்புடைமையால் முருகக்கடவுளுக்குத் 'தகப்பன்சாமி' என்ற ஒரு திருநாமம் வழங்குதல் அறிக.

ஞானநாயகராகிய பரமசிவன் நன்கு அருள்புரிந்தார். பரமசிவன் குமாரனுக்குப் பிரணவப் பொருள் தெரியுமோ என்ற அப்படிப்பட்ட ஐயத்தை ஒழித்து, அகமகிழ்ச்சிகொண்டு, அங்குத் தமது இளையகுமாரனாகிய அவனைச் சிறப்போடு இருக்கும்படி அருள்செய்து, தேவர்களெல்லோரும் வணங்கித் துதித்துப் உடன்வர, பழையபடியே ருஷபத்தின்மீது பொருந்திச் சென்று, அநாதியான பெரிய கைலாஸகிரிக்கு எழுந்தருளினார். பிறகு, பரமசிவன், தமது முன்னே பொருந்திய பிரமனையும், விஷ்ணுவையும், மற்றைத்தேவர்களையும், முனிவர்களையும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு, தமது திருக்கோயிலிற் சேர்ந்தருளினார்.

•

குமாரமூர்த்தி, கந்தகிரியிலே, பொன்னினாலும் நவரத்தினங்களினாலும் அமைந்த சிங்காசனத்தின்மேல் ஏறி, பக்கங்களிலே லக்ஷத்தொன்பதுவீரர் துதிக்க, யாவர்க்கும் இன்பத்தைச் செய்துகொண்டு இனிது வீற்றிருந்தான். அங்கு எழுந்தருளியிருந்த குமாரக்கடவுள், அருமையான வேதங்களுக்கெல்லாம் முதலிற் சொல்லப்படுவதாய்ச் சிறந்தஎல்லாப்பொருள்களினும் மேன்மையுடையதாகிய ஏகாக்ஷரமஹாமந்திரத்

தினது மெய்ம்மைப்பொருளைத் தனக்கு உபதேசித்தருளும்படி, அகஸ்தியமுனிவன் வந்து குற்றமில்லாதபடி நமஸ்கரித்துக் கேட்க, அப்பொருளை அக்குறுமுனிவனுக்கு உபதேசித்தருளி, இன்னும் பரமசிவனால் சொல்லப்பட்ட சிறந்த ஆகமங்களையும் அன்போடு அம்முனிவனுக்கு உபதேசித்தருளினான்.

இச்சரித்திரத்தினால், யாவரும், முக்கியமாக உயர்ந்த நிலையிலுள்ளவர்களனைவரும் தம் உயர்நிலைக்கு ஏற்பக் கல்வியறிவோடு நற்குண நல்லொழுக்கங்களை மேற்கொண்டிருத்தல்வேண்டுமென்பதும், பொருளறியாது மூலபாடஞ் செய்தலால் பரிபவமும் துன்பமுமே நேருமென்பதும், யார்க்கும் செருக்கானது அவமானத்தையே விளைக்குமென்பதும், ஒவ்வொருவரும் தமது குற்றத்தினிமித்தம் தண்டனையைப் பெற்றால் அதற்காக மனம்வருந்தாது தமது பாபம் தொலைந்தது என்று கருதி அமைந்திருத்தல் தகுதியென்பதும் முதலிய நீதிகள் புலப்படும்.

பிரணவப்பொருளறியாத பிரமன்

என்னும் சரித்திரம்

முற்றிற்று.

600 008
12012

நீதிநூல், துதிநூல், சாஸ்திரம்.

	ரூ.	அ.	பை.
குமரேசசதகம் (சாரமாகத் தேர்ந்தெடுத்த செய்யுள்களின் றிரட்டு; அரும்பதவுரையுடன்.)	0	2	6
அறப்பளீசுரசதகம் ஷை ...	0	2	0
திருவேங்கடசதகம் ஷை ...	0	2	0
இராமாயணநீதிகவித்திரட்டு	0	2	0
விவேகசிந்தாமணி ஷை ...	0	1	6
மன்பதையாற்றுப்படை ...	0	2	0
திருக்கச்சிந்தேப்பெருமானந்தாதி ...	0	2	0
திருவல்லிக்கேணியந்தாதி (அரும்பதவுரையுடன்) ...	0	2	0
நேவிகாலோத்தரம் ...	0	1	6
ஹஸ்தரேகைசாஸ்திரம் ...	2	0	0

இனிய கதைப்புத்தகங்கள்.

	ஆ.	பை
பத்மினி	12	0
பஞ்சதந்திரம் (அரும்பதவுரையுடன்)	6	0
ஷை மூலம்	4	0
சம்பகமாலினி	4	0
குலசேகரன்	4	0

இப்புத்தகங்கள் வேண்டியவர், கீழ்க்குறிக்கு மிடங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்,
தமிழ்ப்பிரதமபண்டிதர், காலெஜ், வேலூர்.

ரிப்பன் புஸ்தகசாலை,
87, தம்புசெட்டிவீதி, சென்னை.

ம-ள-ள-ஸ்ரீ.
D. K. சுப்பைய நாயுடு அவர்கள்,
புஸ்தகவியாபாரிகள், தஞ்சாவூர்.

ம-ள-ள-ஸ்ரீ.
மூ. கருப்பணபிள்ளையவர்கள்,
புஸ்தகவியாபாரிகள், புதுமண்டபம், மதுரை.

ம-ள-ள-ஸ்ரீ.
L. M. தருமலிங்க முதலியார் அவர்கள்,
டீசர், ஸெண்ட் ஜோஸப்ஸ் காலெஜ், பெங்களூர்.